# ‘Bisphosphonates’ எடுக்கும் நோயாளருக்கான பராமரிப்புக்காக

‘Osteoporosis’ போன்ற பல் எலும்புத்திசு அழிவு நோயைக் கட்டுப்படுத்த உதவும் ‘bisphosphonates’ மருந்தை உங்கள் வைத்தியர் எழுதிக்கொடுக்கக் கூடும். அவை என்புநோய் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும் எலும்பு முறிவைத் தடுக்கவும் உதவும், ஆனால் அவை எங்கள் வாயையும் பாதிக்கலாம்.

## ‘Bisphosphonates’ எடுப்பதன் விளைவாக எனக்குப் பிரச்சினைகள் வரக்கூடிய சாத்தியம் எவ்வளவுண்டு?

‘Bisphosphonates’ ஆல் வரும் பிரச்சினைகள் பொதுவானவை அல்ல ஆனால், எல்லா மருந்துகளையும்போல, உங்களையும் உங்களது தனிப்பட்ட நிலவரங்களையும் பொறுத்து அபாயம் வேறுபடலாம்.

பொதுவாக ‘bisphosphonate’ மாத்திரைகளை எடுக்கும் நோயாளர்களில் கிட்டத்தட்ட 1% மானவர்களுக்கு மாத்திரம் சத்திர சிகிச்சையின் பின்னர் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது.

நீங்கள் ‘bisphosphonate’ ஊசிமருந்து எடுத்திருந்தால், சத்திரசிகிச்சையின் பின்னர் சிக்கல்களுக்கான அபாயம் அதிகம்.

## எனது வாயை அது எப்படிப் பாதிக்கும்?

‘Bisphosphonates’, இன் மிகவும் அரிதான பக்கவிளைவு bisphosphonate தொடர்பான தாடைஎலும்பின் (BRONJ) ‘osteonecrosis’ஆகும்.

பொதுவாக, வாய் அறுவைச்சிகிச்சையின் பின்னர் BRONJ ஏற்பட்டு முரசினூடாகத் தாடை எலும்பு வெளியில் தெரிகிறது.

நீங்கள் வாய் சத்திர சிகிச்சை செய்யவில்லையானால், அதுவும் நடக்கலாம் ஆனால் இது அரிது.
‘Osteoporosis’ பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.osteoporosis.org.au

## BRONJ ஐத் தடுத்துதவ நான் என்ன செய்ய வேண்டும்.

உங்கள் பல் வைத்தியரின் அறுவைச்சிகிச்சைக்கு முன்னரான அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

உங்கள் வாய் குணமடையும்போது, பொய்ப்பல் போடுவதைத் தவிருங்கள் அது காயத்தை உண்டுபண்ணக்கூடும்.

ஒரு பல் வைத்தியரை அணுகி ஒழுங்காகப் பரிசோதப்பதை ஞாபகத்தில் வைக்கவும்.

## எனக்கு BRONJ இருக்கிறதோவென்று எனக்கு எப்படித் தெரியும்?

வெளித்தள்ளிய எலும்பு, வலி, வீக்கம், விரும்பாத சுவை, விறைப்பு - BRONJ கொண்டுள்ள நோய் அறிகுறிகளாகும்.

இந்த நோய் அறிகுறிகளால் நீங்கள் வருந்தினால், அல்லது ஏதாவது கரிசனை இருப்பின் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: (Royal Dental Hospital) (றோயல் பல் வைத்தியசாலை) மெல்போர்ன் (03) 9341 1000. இல் ஒரு பல்வைத்தியரைப் பார்ப்பதற்கு ஒரு முன்பதிவை ஒழுங்கு செய்யவும.

சிலருக்கு, ஒரு தொகுதி நுண்கிருமி கொல்லி (antibiotics) யும், சில வலி நிவாரணங்களும் சுகம் தரலாம்.



மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் **(03) 9341 1000** அல்லது

உங்களுக்குக் கிட்டிய சமூக மருந்தகத்தைக் கண்டறிவதற்கு போய்ப்பாருங்கள் **www.dhsv.org.au**

dental health services victoria
oral health for better health